கண்டுபிடிக்கப்பட்டு, கொண்டு வரப்பட்டு, காமராஜர் அவர்களால் வளர்க்கப்பட்ட எனக்கு மற்றவர்கள் உதவி செய்தார்கள் என்று சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இன்னாரால் நான் வளர்க்கப்பட்டவன் என்று சொல்ல வேண்டுமென்றால் பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலேயே நான் அரசியலில் வளர்க்கப்பட்டவன் என்ற தகவலை மட்டும் சொல்லி அமர்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன 'point of order' இருக்கிறது ? உட்காருங்கள். அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்துக் கவன ஈர்ப்பு.

5. கவன ஈர்ப்பு.

(அ) மேட்டூரிலுள்ள 'கெம்பிளாஸ்ட்' தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. அர்ஜுனன் சி. கிருஷ்ணன் க. பழனிசுவாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. அர்ஜுனன் : தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூரில் உள்ள கெம்பிளாஸ்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் உள்ள "கெம்பிளாஸ்ட்" என்ற நிறுவனத்தில் 502 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இதில் கெம்பிளாஸ்ட் எம்ப்ளாயீஸ் யூனியன் என்ற

அரசியல் சார்பற்ற ஒரு தொழிற் சங்கம் மட்டுமே இயங்கி வருகிறது. தொழிலாளர்கள் சரிவரப் பணி செய்யவில்லை என்ற நிர்வாகத்தின் பிப்ரவரி 89 ஆம் மாத கடிதங்களைத் தொடர்ந்து நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கம் ஆகியோருக்கிடையே 28—2—89 அன்று சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பு சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. நிர்வாகத்துடன் மேற்கொண்ட நேரடி பேச்சுவார்த்தைகளில் சுமுகமான முடிவு ஏற்படாததால் தொழிலாளர்கள் தொழிற்சாலையின் விதிப்படி வேலை (work to rule) செய்து வருவதாகவும் இதன் மூலம் மிகை நேரப்பணி செய்யப்படுவதில்லை என்றும் ஆனால் தொழிலாளர்கள் எப்போதும்போல பணிக்குச் சென்று வருகிறார்கள் என்றும் (1) தற்போதிருக்கும் 9 கிரேடுகளை 5 கிரேடுகளாக மாற்றுதல் (2) பயிற்சி மற்றும் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளித்தல் (3) ஊதியம் மற்றும் இதர படிகளில் உயர்வு அளித்தல் ஆகிய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1—10—88 முதல் அமல்படுத்தவேண்டும் என்பதுடன் நிர்வாகத்தின் பிப்ரவரி மாத நோட்டீஸ்கள் வாபஸ் பெறப்படாவிட்டால் 11—3—89 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வேலை நிறுத்தத்தில் ஈடுபட அறிவிப்புக் கொடுத்திருப்பதாகத் தொழிற்சங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர்களின் 'விதிப்படி வேலை' என்ற மேற்குறிப்பிட்ட வேலையின் காரணமாக உற்பத்தி பூஜ்யம் ஆகி விட்டது என்றும் தொழிலாளர்கள் சகஜ நிலைக்கு வராவிட்டால் 'பாதுகாப்பு' என்பதில் நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டியிருக்கும் என்றும், நிர்வாகத்தின் நோட்டீஸ் திருப்பப்பெற இயலாது என்றும், கிரேடுகள், வாரிசுகளுக்குப் பயிற்சி அளித்தல், பஞ்சப்படி உயர்வு, போனஸ் பிரச்சினை, ஒப்பந்த காலம் 3 வருடமா அல்லது 5 வருடமா என்பதுகுறித்தும் பேசி முடிக்கலாம் என்றும் நிர்வாகத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் நிறுவனம் 2—3—89 காலை 6 மணி முதல் கதவடைப்பு செய்யப்பட்டது.

நிர்வாகத்தின் கதவடைப்பினைத் தொடர்ந்து சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பு இருதரப்பினருக்குமிடையே பல்வேறு தேதிகளில் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகளில் ''தங்களது கோரிக்கைகள் குறித்து ஒரு முடிவு ஏற்படும் வரையில் 'விதிப்படி வேலை' என்ற அடிப்படையில் வேலை செய்வதாகவும் இல்லையெனில் ஒரு கணிசமான தொகையை 'ஆரம்ப நிலை'யாக அறிவித்தால் சகஜ நிலையில் பணி செய்வதாகவும் தொழிற்சங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஒரு கணிசமான தொகையை 'ஆரம்ப நிலை'யாக அறிவிக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தொழிற்சங்கம் வைப்பதால் ஒப்பந்த காலம் மாறுபடும்; பஞ்சப்படி மற்றும் போனஸ் ஃபார்முலா ஆகியவை குறித்தும் பேசப்படவேண்டும் என நிர்வாகத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பினரும் தத்தம் நிலையிலேயே இருந்து வருவதால் பிரச்சினைக்கு சுமுக முடிவு ஏற்படும் வகையில் மீண்டும் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. அர்ஜுனன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரையில் கெம்பிளாஸ்ட் நிறுவனத்தில் லாப நட்டக் கணக்கின் அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு பற்றிய பேச்சுவார்த்தை நடைபெற்று அந்த அடிப்படையில் ஒப்பந்தம் போடப்படுவதும், அதற்குப் பிறகு அந்தத் தொழிற்சாலை சுமுகமாக இயங்குவதும் வாடிக்கையாக இருந்து வருகிறது. மூன்றாண்டுகள் முடிந்து இப்போது ஒப்பந்தத்தினுடைய காலத்தில் பேச்சுவார்த்தை என்ற முயற்சியில் ஈடுபடுகிற நேரத்தில் அந்தத் தொழிற்சாலையை 'லாக் அவுட்' செய்து விட்டு, தொழிலாளர்களை நடுத்தெருவில் நிறுத்திவிட்டுப் போயிருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வரி கிட்டத்தட்ட ரூ. 278 லட்சம் கூட இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அத்தனை தொழிலாளர்களும் நடுத்தெருவில் நிற்கிறார்கள். அதை மனதில் கொண்டு இதில் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி, உடனடியாகப் பேச்சுவார்த்தை மூலமாக அந்த ஆலையை அரசு திறக்குமா என்று அறிய விரும்புகிறேன்;

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது தொடர்பாக நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் எழுந்துள்ள நிலை குறித்து இறுதிக் கட்டமாக சேலம் துணை ஆணையாளரிடம் 27—4—1989 ஆம் தேதியன்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. ஒரு இணக்கமான முடிவு வராத காரணத்தால் மீண்டும் இந்தப் பேச்சுவார்த்தை தொடரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே இணக்கமான முடிவிற்கு வரவேண்டும். அங்கே சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை. தொழிற்சாலை மிக அதிகமாக லாபத்தில் ஓடக்கூடிய தொழிற்சாலை. அரசாங்கத்திற்குக் கோடிக்கணக்கான ரூபாய் வரி வரக்கூடிய தொழிற்சாலை. எனவே, ஏற்கெனவே பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இந்தத் தொழிற்சாலை லாக்-அவுட் செய்யப்பட்டிருப்பதால் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, தொழிற்சாலையைத் திறந்து வைத்துக்கொண்டு, தொழிலை நடத்திக்கொண்டு, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் பேச்சுவார்த்தையைத்தொடர்வதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய

விரும்புகிறேன். அடுத்து, மின்வெட்டைக் காரணமாக வைத்து தான் இந்த 'லாக்-அவுட்' செய்யப்பட்டிருக்கிறதா என்பதை யும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி மின்வெட்டல்ல இந்தக் கதவடைப்பிற்குக் காரணம். இங்கே தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் நடந்த பேச்சுவார்த் தையில் உடன்பாடு ஏற்படாத காரணத்தால்தான் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தினரின் கோரிக்கையெல்லாம், நாங்கள் ஆலையைத் திறப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் 'ஒர்க் டு ரூல்'—அதாவது சட்டப்படிதான் நாங்கள் வேலை செய்வோம் என்ற நிலையிருக்கிறது. அது மாறி சகஜநிலைக்குத் தொழிலாளர்கள் வந்துவிடுவார்களானால் நாங்கள் ஆலையைத் திறப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். தொழிலாளர்கள் 'ஸ்டார்ட்டிங் பாயிண்ட்' என்ற அடிப்படையில் ஒரு கணிசமான தொகையை முதலில் வழங்கினால்தான் பேச்சுவார்த்தை தொடங்கு வதற்கும், சகஜநிலை உருவாவதற்கும் வாய்ப்பாக இருக்கு மென்று சொல்கிறார்கள். எனவே தொழிலாளர் தரப்பிலும் நிர்வாகத் தரப்பிலும் தங்கள் நிலையிலே அவர்கள் நின்று கொண்டு இருக்கிற காரணத்தால், இணக்கமான முடிவை உடன் மேற்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், விரைவில் ஒரு நல்ல முடிவு நிச்சயமாக எடுக்கப்படும்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் குடிநீர் கிடைக்காதது குறித்து.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் கடந்த 10 நாட்களாகக் குடிநீர் வழங்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: